**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No.259/2023

Deposition of witness – PW–12

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரம் | Caste | : |
| S/o. | : ராமசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 27.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் தாரமங்கலம் சின்னகவுண்டம்பட்டியில் குடியிருக்கிறேன். எனது மனைவி பெயர் மகேஸ்வரி. அவருக்கு சின்னபொன்னு என்ற பெயரும் உண்டு. எங்களுக்கு 9 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எங்களுக்கு இரண்டு கிணறுகள் உள்ளது. அதில் ஒரு கிணறு கூட்டுபாத்தியத்தில் உள்ளது. என்னுடைய தனி பாத்தியமாக உள்ள கிணற்றில் மட்டும் மின் இணைப்புடன் மோட்டார் உள்ளது.

08.01.2023ம் தேதி மாலை 4.00 மணி அளவில் கிணற்றில்

இறந்துபோன ஒரு நபரின் பிரேதம் கிடப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. தோட்டத்திற்கு அருகில் இருப்பவர்கள் சொல்லக்கேட்டு நான் இந்த தகவலை தெரிந்து கொண்டேன். பின்னர் நான் 09.01.2023ம் தேதி சம்பவ இடமான என்னுடைய கிணற்றுக்கு சென்றேன். அங்கு போலிசாரும் தீயணைப்புதுறையினரும் இருந்தார்கள். நான் தண்ணீரில் பிரேதத்தை பார்த்தேன். பின்னர் போலிசார் பிரேதத்தை வெளியே எடுத்த பிறகு நான் பார்த்தேன். பிரேதமானது கை, கால்கள் முண்டம் என்று தனித்தனியாக வெட்டுப்பட்டு இருந்தது. இறந்தவர் பெயர் மணி என்றும் அவர் பெரியசோரகை கிராமத்தை சார்ந்தவர் என்பதை நான் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,

Principal Sessions Judge, Salem.